REGD. NO. M. 6511 ★ தனி இதழ் 0—1—0 ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 85630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

'நம் நாடு'
புதிய சந்தா விகிதம்
[ஏப்ரல் 4-ந் தேதியிலிருந்து]
★

மூன்று மாதம்	...	...	ரூ. 6
ஆறு மாதம்	...	...	ரூ. 12
ஒரு வருடம்	...	...	ரூ. 24

தனி இதழ் 7 காசுகள்
இலங்கையில் 10 சதம்

மலர் 4] சென்னை: பங்குனி 22உ வியாழன் (4—4—57) ★ ★ வெளியூர்: பங்குனி 23உ வெள்ளி (5—4—57) [இதழ் 254

சட்டசபைமாற்றம் வசதியானதாம்! சிக்கனமானதாம்!

சட்ட சபை-மேல் சபை கூட்டுவதில் உள்ள சங்கடம் தவிர்க்கப்பட்டதாம்!

சட்ட சபைக் கட்டிடம் தற்காலிக ஏற்பாடுதானும்!

புதிய கட்டிட நிர்மாணங்களுக்கும் சட்ட சபை மாற்றத்திற்கும் தொடர்பில்லையாம்!

அரசாங்கத்தின் கண்துடைப்பு அறிக்கை

சென்னை, ஏப். 3—

"மீண்டும் சட்டசபைக் கூட்டத்தை, இன்றைய மேல்சபை கூடும் இடத்தில் கூட்டுவதும், இன்றைய கமிட்டி அறையை மேல் சபைக் கூடமாக மாற்றி அமைப்பதும் வசதியானதும் சிக்கனமானது மாகும்" என்பதை வலியுறுத்தி, அரசாங்கச் சார்பில் அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

சட்டசபைக் கூட்டத்தை, இப்பொழுது நடைபெற்றுவரும் மவுண்ட்ரோட் அரசாங்கப் பெரும் நிலப்பரப்பிலிருந்து, கோட்டைக்குத் திரும்பவும் மாற்றப்படுவது குறித்து எழுந்துள்ள எதிர்ப்புக்கு சமாதானம் கூறும் கருத்திலேயே, மேற்படி அறிக்கை வெளியிடப்பட்டு இருக்கிறது.

"1952-ம் ஆண்டு பொதுத் தேர்தலுக்கு முன் சட்டசபை உறுப்பினர்களின் எண்ணிக்கை 214 ஆக இருந்த பொழுது, சட்டசபை (கோட்டையினுள்) இன்றைய மேல் சபை கூடும் கட்டிடத்தில்தான் நடைபெற்று வந்தது. எத்தகைய வசதிக் குறைவும் அதனால் ஏற்படவில்லை.

"மவுண்ட்ரோட் கட்டிடத்தை நிர்மாணித்தபொழுதே, ஒரு இடைக்கால ஏற்பாடாக சட்டசபைக் கூட்டத்தை அங்கு கூட்டுவது' என்ற எண்ணத்தில்தான் நிர்மாணிக்கப்பட்டதாகும். வசதியானதும் நிரந்தரமானதுமான ஓர் இடத்திற்கு பின்னர் மாற்றிவிடுவது என்ற எண்ணம் எப்பொழுதும் இருந்தே வந்திருக்கிறது.

"அரசாங்கப் பெரும் நிலப்பரப்பில் சட்டசபைக் கூட்டத்தைக் கூட்டிவருவதற்கும், கோட்டையில் மேல் சபைக் கூட்டத்தைத் தொடர்ந்து கூட்டி வருவதற்குமான ஏற்பாட்டினை ஒரே காலத்தில் செய்வதில் பெரும் தொல்லைகள் இருப்பதை உணரப்பட்டது.

"கோட்டைக்குள்ளாகவே சட்டசபை கூடுவதற்கும், மேல்சபை கூடுவதற்கும் செய்யப்படும் புதிய ஏற்பாட்டிற்கு மொத்தத்தில் ரூ. 70,500 - தான் செலவாகக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

"சட்டசபைகளுக்கான குளிர் நிலை ஏற்பாடுகள் தனித்தன்மை கொண்டதாகும்.

"மேலே ஒரு கட்டடத்தையும், இரண்டு அறைகளையும் இத்தொடர்பில் புதிதாகக் கட்டப்பட இருக்கிறது என்பது தவறானதாகும். இக்கட்டிட ஏற்பாடுகள் அரசாங்க அலுவலகங்களுக்கு வசதி செய்து தர மேற்கொள்ளப்பட்டுள்ளவைகளாகும்.

"சிற்றுண்டி விடுதிக்கான நிரந்தரக் கட்டிடமும், தற்காலிக மோட்டார் குடில்களை நிரந்தரமாக்குவதும், சட்டசபைமாற்ற ஏற்பாட்டிற்கும் எவ்விதத் தொடர்பும் கிடையாது. அவை, அரசாங்க அலுவலக ஊழியர்களுக்காகச் செய்யப்படும் வசதிகளாகும்."

மாநில சுயாட்சி உரிமை

கிழக்குப் பாகிஸ்தான் கோருகிறது

சட்டசபையில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றம்

டாக்கா, ஏப். 3—

கிழக்குப் பாகிஸ்தானுக்கு முழு மாநில சுயாட்சி உரிமை வழங்குமாறு கோரி, கிழக்கு பாகிஸ்தான் சட்டசபை தீர்மானமொன்று நிறைவேற்றியிருக்கிறது.

எதிர்க் கட்சியினர் உட்பட சபையினர், குரல் ஒட்டுமூலம் இத்தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கின்றனர்.

மூன்று அம்சங்களில் மட்டும் மத்திய சர்க்காருக்குப் பொறுப்பு

தற்காப்பு, அயல்நாட்டு உரிமை, கரன்சி ஆகிய மூன்றைத் தவிர, மற்ற இலாகாக்களை மாநில அரசாங்கத்திடம் விட்டுவிட வேண்டுமென்றும் முழு மாநில சுயாட்சிக் கோரிக்கையை கிழக்கு பாகிஸ்தான் அரசாங்கம், மத்திய ஆட்சியிடம் வற்புறுத்த வேண்டுமென்றும் அத்தீர்மானம் கோருகிறது.

வெளிநாட்டிலிருந்து வேதனைச் செய்தி

இந்தியக்குடும்பம்வெட்டி சாய்க்கப்பட்ட விபரீதம்

ஜோகன்ஸ்பர்க், ஏப். 2—

நால்வர் கொண்ட ஒரு இந்தியக் குடும்பம் முழுவதுமே துண்டு துண்டாக வெட்டப்பட்டுவிட்ட செய்தி ஒன்று கிடைத்திருக்கிறது.

கணவன், மனைவி, இரு குமாரர்கள் ஆகியோர் கொண்ட இக்குடும்பம், நேட்டாலுக்கு அருகிலுள்ள ஹனேவர் என்ற நகரில் ஒரே அறையுள்ள தகரக்கூரை போட்ட சிறு வீட்டில் வசித்து வந்ததாம்.

இரத்தக்கறை படிந்த வெட்டரிவாள் ஒன்றைப் போலீசார் கைப்பற்றியுள்ளனர்.

இலங்கையிலும் இறுதிக் கட்டம்?

தளங்களை எல்லாம் பிரிட்டன் இலங்கையிடம் ஒப்படைத்துவிடும்

கொழும்பு, ஏப். 3—

இலங்கையிலுள்ள பிரிட்டிஷ் தளங்கள் இலங்கை அரசாங்கத்திடம் வரும் நவம்பர் மாத மத்தியில் ஒப்படைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

'தளங்கள் இலங்கையிடம் ஒப்படைக்கப்பட்ட பின்னர், பிரிட்டனுக்கு அங்கு ஒரு சில சலுகைகள் அளிப்பது பற்றியும், அந்தச் சலுகைகளின் தன்மையைப் பற்றியும், சலுகைகள் எத்தனை ஆண்டுகள் நீடிக்கவேண்டும் என்பது பற்றியும் இலங்கை அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது' என்று பிரதமர் பண்டாரநாயகா தெரிவித்துள்ளார்.

'உலகத்திலேயே மிகுதியான இரும்புச் சத்தைக் கொண்டுள்ளது'

'வெட்டியெடுக்காமல் இருப்பது வியப்பளிக்கிறது'

சாந்தூர் இரும்புச் சுரங்கம் பற்றி இரஷ்யத் தொழில் நிபுணர்

ஹூப்லி, ஏப். 3—

"மைசூர் மாநிலத்திலுள்ள சாந்தூர் பகுதியில் படிந்திருக்கும் இரும்பு தாதுப் பொருள் உலகத்திலேயே மிகச் சிறந்ததாகும்.

"உலகத்திலுள்ள உயர்ந்த இரும்புச் சுரங்கங்களில் 60 சதவிகிதமே இரும்புப் பொருள் இருக்கிறது. ஆனால், சாந்தூர் இரும்புக் கனிப் பொருளில் 70 சதவிகித இரும்புச் சத்து இருக்கிறது,"

மேற்படி கருத்தை, பிர்லா தொழில் நிறுவனத்துடன் தொடர்பு கொண்டுள்ள ரஷ்யத் தொழில் நிபுணரான லொரோவ் என்பார் தெரிவித்துள்ளார்.

சாந்தூர், ஏற்கனவே ஒரு சிற்றரசாட்சியில் இருந்து வந்தது. பெல்லாரி மாவட்டத்தைச் சேர்ந்த அவ்வூர் இப்பொழுது மைசூர் மாநிலத்துடன் இணைக்கப்பட்டு இருக்கிறது.

உலகத்திலேயே அதிகபட்ச இரும்பு சத்தைக் கொண்டிருக்கும் சாந்தூர் இரும்புக் கனியை, இதுவரை வெட்டி எடுத்துப் பயன்படுத்தாதிருப்பது கண்டு, அவர் பேராச்சரியமுற்றார்.

அங்கு படிந்துள்ள இரும்புத் தாதுவைத் திரட்டுவதற்கு, பெரும் சுரங்கத் தொழில் திறமை தேவை இல்லை என்றும், சாதாரணமாக வெட்டி எடுப்பதின் மூலமே, சில நிமிடங்களில் ஒரு வண்டி நிறைந்த தாதுப் பொருளை சேகரித்துவிட முடியும் என்று அவர் அறிவித்தார்.

பத்து இலட்சம் ரூபாய் சிறு மூலதனத்தைக் கொண்டே தொழிற்சாலை ஒன்றை நிறுவி தேன் இரும்பை உற்பத்திச் செய்வது சாத்தியம் என்றும், அது தொழில்துறையில் தன் நிறைவு கொண்டதாக இருக்கும் என்றும் அவர் தெளிவுபடக் குறிப்பிட்டுள்ளார்.

பஸ் கட்டண உயர்வுக்கு எதிர்ப்பு

ஆயுதப் படையினருக்கு சர்க்கார் உத்தரவு

41 பேர் பலியாகிவிட்டனர்

சாண்டியாகோ, ஏப். 2—

தென் அமெரிக்காவில் உள்ள 'சிலி' மாநிலத்தில் அரசாங்கப் பஸ் போக்குவரத்துக் கட்டண உயர்வை எதிர்த்துப் பரவலாக நடைபெற்றக் கலகத்தின் விளைவாக 41 பேர் கொல்லப்பட்டு விட்டனராம்.

அரசாங்கம் அவசரச் சட்டத்தை அமுல் செய்திருப்பதுடன், கலகத்தை ஒடுக்கி அமைதியை நிலைநாட்ட ஆயுதம் தாங்கிய படையினருக்கு உத்தரவும் பிறப்பித்திருக்கிறதாம்.

தி. மு. கழகச் சார்புடைய 'வார இதழ்'களின் விலை நிர்ணயம்

திராவிட முன்னேற்றக் கழகச் சார்புடைய வார இதழ்களின், ஆசிரியர் — உரிமையாளர்களைக் கொண்ட ஆலோசனைக் கூட்டம் ஒன்று 3—4—57 பிற்பகல் 4-மணிக்கு 'அறிவகத்'தில், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அரசியலார் புகுத்தியுள்ள புதிய நாணய முறை, செய்தித்தாள் விலையேற்றம், தபால் கட்டண உயர்வு ஆகியவைகளைப் பற்றி விவாதிக்கப்பட்டது.

இறுதியாகக் கீழ்க்கண்ட முடிவு ஒரேமனதாக நிறைவேற்றப்பட்டது:—

"புதிய காசுமுறை அமுலுக்கு வந்துள்ளதற்கேற்ப, தபால் கட்டண உயர்வு, செய்தித்தாள் விலையேற்றம் ஆகியவைகளைச் சரிக்கட்ட தி. மு. கழகச் சார்புடைய 'வார இதழ்'கள் அனைத்தும் கிரவுன் ½ அளவில் 8 பக்கங்கள் — 13 காசும்; 12 பக்கங்கள்— 16 காசும் என விலை நிர்ணயிப்பதுடன், இதனை அடிப்படையாகக் கொண்டு, கழகச் சார்புடைய எல்லா இதழ்களும் ஆவன செய்யுமாறு இக்கூட்டம் வேண்டிக் கேட்டுக் கொள்கிறது."

நம் நாடு
தி. மு. க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 4—4—57 வியாழன்

மேனனுக்கு பண்டா தந்த பரிசு!

இலங்கை நாட்டின் நேசம் தனக்கு வேண்டும் என்பதற்காக, அங்கு வாழ்ந்துவரும் இந்திய (தமிழ்) பரம்பரையினரின் எதிர்கால நலத்தைக் குறித்து எடுத்துக்கொள்ள வேண்டிய அளவு அக்கரை எடுத்துக்கொள்ளாமல் இருக்கிறது இந்தியப் பேரரசு.

அங்கு பல்லாண்டுக்காலமாக வாழ்ந்துவருபவர்களாக அங்குள்ள இந்திய (தமிழ்) மரபினர் இருந்தபோதிலும், அவர்களை தன் நாட்டின் சொந்த மக்களாக ஏற்றுக்கொண்டு, இலங்கை குடிவாழ் உரிமையை முழு அளவிலோ அல்லது குறைந்த அளவிலோ, அவர்கள் அனைவருக்கும் கொடுக்க மறுத்து வருகிறது இலங்கை ஆட்சி!

இலங்கைத் தீவில் இன்று வாழ்ந்துவரும் இந்திய (தமிழ்) மரபினரை, தன்நாட்டு மக்கள்தான் என ஒப்பிக்கொண்டு, அவர்கள் அனைவரையும் சிறுகச் சிறுக இந்தியாவிற்குத் திரும்ப அழைத்துக் கொள்ள வேண்டும் என்பது இலங்கை ஆட்சியின் உள்ளக்கிடக்கை. ஆனால் இந்தியப் பேரரசோ, அங்குள்ள இந்திய (தமிழ்) மரபினரில் பெரும்பான்மையினரை இந்திய மக்கள்தான் என ஒப்புக்கொள்ளவே கூடாது எனத் தீர்மானித்துக் கொண்டு இருக்கிறது.

இந்தியப் பேரரசு—இலங்கை அரசு ஆகிய இரு அரசுகளின் பிடிவாதத்தில் சிக்கி, இருதலைக் கொள்ளி எறும்புபோல், இலட்சக் கணக்கில் இந்திய (தமிழ்) மரபுவழிவந்தமக்கள் இலங்கைத் தீவில் நாதியற்ற 'நாடோடி'களாகக் கண்கலங்கிக் கிடக்கின்றனர். இத்தகு கேவல நிலையில் கிடக்கும் இந்திய (தமிழ்) மரபினரை, மேலும் மேலும் துன்புறுத்திக் கொண்டிருப்பதிலேயே இன்பம் காணத் துடித்துக்கொண்டு இருக்கிறது இலங்கை ஆட்சி.

இலங்கைத் தீவையே என்றென்றைக்கும் தாயகமாகக் கொண்டு வாழ்ந்துவரும் தமிழ் மக்களின் மொழிக்கே ஊறு தேடிவிட்ட, சிங்கள ஆட்சியினர், அங்கிருக்கும் இலட்சக் கணக்கான இந்திய (தமிழ்) மரபினர்களுக்கு, என்றைக்காவது ஒருநாள் குடிஉரிமை அளிப்பர் என எதிர்ப்பார்ப்பது வீணேயாகும். இத்துறையில் சிங்களவர்களுக்கு என்றைக்காவது ஒரு நாள் அன்பு சுரந்துவிடுமானால், அந்த நிகழ்ச்சியை மகத்தானதோர் அற்புதம் என்றுதான் கூறவேண்டும்!

குடிமக்களாகப் பதிவு செய்துகொள்ள முடியாமல், பூர்வீகத் தமிழ் தாயகத்திற்குத் திரும்பும் உரிமையும் இல்லாமல், இலங்கையில் நாடற்ற நாடோடிகளாகத் தாங்கமுடியா துயரத்தைத் தாங்கிக்கொண்டிருக்கும், இந்திய (தமிழ்) மரபினரில் பெரும்பான்மையினர் தோட்டத் தொழிலாளர்கள் ஆவர்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு (பிராவிடண்ட் பண்டு) நலநிதி வசதி உண்டு. அந்த நலநிதியின்படி, ஒவ்வொரு தொழிலாளியும் தனது சம்பளத்தில் 5 சதவிகிதமும், தோட்ட முதலாளியின் பங்காக 7½ சதவிகிதமும் செலுத்துவர். அவ்வாறு சேர்ந்துவரும் நல நிதியை, தொழிலாளி பெறுவதற்கான காலம் வரும் பொழுது, சேர்ந்துள்ள மொத்தத் தொகையை வட்டியுடன் பெற்றுக்கொள்ள தொழிலாளிக்கு உரிமை இருந்துவருகிறது.

இப்பொழுது, நலநிதியைத் தொழிலாளர் பெற்றுவரும் உரிமைக்கு, ஒரு புதிய நிபந்தனையைப் போடுவதின் மூலம், தோட்டத் தொழிலாளர்களாக உள்ள நாடற்ற இந்திய (தமிழ்) மரபினர்களுக்கு, மேலும் ஒரு தீங்கை இழைக்கத் துணிந்திருக்கின்றனர் இலங்கை சமதர்ம ஆட்சியினர்.

இலங்கைக் குடிமக்களுக்கு மட்டுந்தான், தாங்கள் சேமித்து வந்தத் தொகையுடன், முதலாளிகள் சேமித்து வந்தத் தொகையையும் கூட்டி வட்டியுடன் பெற உரிமை உண்டாம். இந்தியர்களும், இலங்கைக் குடிமக்களாக இல்லாத மற்றவர்களும் (இந்தியத் தமிழ் மரபினர் உட்பட) தாங்கள் சேமித்து வந்துள்ள தொகையையும், முதலாளிகள் கொடுத்தத் தொகையையும் சேர்த்து வட்டியுடன் பெறவேண்டுமானால், தாங்கள் இலங்கையை விட்டு வெளியேறிவிடப் போவதை மெய்ப்பிக்க வேண்டுமாம். அதுபோல் மெய்ப்பிக்க மறுத்து இலங்கைத் தீவிலேயே நீடித்து இருப்பவர்கள், தோட்டத் தொழிலாளர்களாக இருந்து பணிபுரிந்த நாட்களில் தாங்கள் சேமித்து வந்தத் தொகையை மட்டுந்தான் பெறுவது சாத்தியமாகும்.

சிங்கள சமதர்ம ஆட்சியினரின் இப்புதிய ஏற்பாடு, முதல்தரமான ஓரவஞ்சனை என்பதை நாம் சொல்லாமலே தெரிந்து கொள்ளலாம். இது வடிகட்டின அநீதி, மனித குலத்துக்கே இழைக்கும் மாபெரும் தீங்கு என்றுங்கூட கூறலாம். இப்புதிய நிபந்தனை மூலம் நாடற்ற தோட்டத் தொழிலாளர்கள் தங்களுக்குக் கிடைக்கும் தொகையைப்போல், ஒரு பங்கு தொகையையும், மொத்தத் தொகைக்குரிய வட்டியையும் இழந்தாக வேண்டும்.

சமதர்ம பண்டாரநாயகாவின் இப்புதிய ஓரவஞ்சனை உத்தரவை, இலங்கை சனநாயகக் காங்கிரசுக் கட்சி கண்டித்திருக்கிறது. இத்திட்டம் சர்வதேச தொழிலாளர் உடன்படிக்கைக்கு முரண்பட்டதாகும் என்றும் அது சுட்டிக்காட்டியுள்ளது. இந்தத் திட்டம் இரண்டாண்டுக்குமுன் கொத்தலாவலை வெளியிட்ட திட்டம் போன்றே உள்ளது என்றும் அது குறிப்பிட்டுள்ளது.

இப்படி. சர்வதேச உடன்படிக்கைகளை உடைத்தாவது தங்களுடைய இன வெறிக்கு வெற்றி தேடிக்கொள்ள வேண்டும் என நினைக்கின்ற பண்டாரநாயகாவின் நேசத்தைத்தான், முக்கியமானது எனக் கருதிக் கொண்டிருக்கிறது இந்தியப் பேரரசு; அதைப் பெற்று பாதுகாத்து வருவதுதான் முக்கியமானது என்றும் சொல்லுகிறார் கிருஷ்ண மேனன்.

இலங்கை ஆட்சியினரின் புதிய உத்தரவு, அவர் நேசத்தை நாடித் தவங்கிடக்கும் இந்தியப் பேரரசைத் தன்னறிவுக்குக் கொண்டுவரவேண்டும். கிருஷ்ண மேனனும், இலங்கை உறவு பற்றி தாம் கூறிய கூற்றுக்கு, இலங்கை ஆட்சி தந்துள்ள தக்க பரிசாகக் கொள்ளவேண்டும்.

'அமைச்சர்கள் நீதிமன்றத்திற்கு வர மறுப்பது பிரபுத்துவ நடிப்பாகும்'

'அப்போக்கு சகித்துக்கொள்ள இயலாத ஒரு 'புதிய சாதி'யை உருவாக்கும்'

'மதிப்புக்குறைவை தேர்தல் நேரத்தில் அமைச்சர்கள் கருதுவதில்லையே'

நீதிமன்றத்தில் ஆஜராகாமலிருக்க அனுமதி கோரிய அமைச்சர்பக்தவத்சலத்தின் மனுவைத் தள்ளுபடி செய்து நீதிபதி தீர்ப்பு

"சட்டத்திற்கு முன்பு அனைவரும் சமம்—என, அரசியல் சட்டம் உத்திரவாதம் அளிக்கிறது. சலுகையை வெற்றிகரமாக வற்புறுத்துவது எதுவும், அந்த அளவிற்கு, அவ்வுத்திரவாதத்தைச் சிதைப்பதையும், விலகிச் செல்வதையும் உள்ளடக்கிக்கொண்டிருப்பதாகும். தெளிதாகவும், போதிய காரணங்களுடனும் கோரப்படாத எந்தச் சிறப்புச் சலுகையையும் நீதிமன்றம் எதிர்த்தேயாக வேண்டும். பிரான்சில் அக்காலப் பிரபுக்களின் போக்கைத் தெரிந்திருப்பவர் எவரும், சலுகையானது மன்ற எதிர்ப்பு முதல் ஏதேச்சாதிகாரம் ஈருக அமைந்திருந்தது என்பதை அறிவர்."

இவ்வாறு, அமைச்சர் பக்தவத்சலனார் அவர்கள் சார்பில், தாம் நீதி மன்றத்திற்குவந்து சாட்சியங் கூறாமல் இருக்க அனுமதிக்க வேண்டும் எனக் கோரப்பட்ட மனுவை விசாரித்து, அம்மனுவை மன்றச் செலவுடன் தள்ளிவிட்ட நீதிபதி பாலகிருஷ்ணய்யர் அவர்கள் தமது தீர்ப்பில் குறிப்பிட்டிருக்கிறார்.

முறிந்துபோன 'பாரத தேவி' 'பிரீ பிரஸ் ஜர்னல்கள்' விவகாரத்தில் ஏற்பட்ட பணம் கொடுக்கல்-வாங்கல் விஷயமாக எஸ். வி. சாமி என்பவர், மூன்றாவது பிரதிவாதியான அமைச்சர் பக்தவத்சலனார் அவர்கள் மீது வழக்குத் தொடுத்துள்ளார்.

அவ்வழக்கில், தம்முடைய சாட்சியத்தைத் தனிக் குழுவின் மூலம் கேட்டுப் பதிவு செய்யவும், நேரடியாக மன்றத்திற்கு வராமல் தமக்கு விலக்கு அளிக்கவும் வேண்டும்என அமைச்சர் சார்பில் உயர் நீதிமன்றத்திற்கு விண்ணப்பித்துக்கொள்ளப்பட்டது. அதற்கு ஆதாரமாக சி. பி. கோ. 133-வது விதியையும், அதன் மீது 1956-ல் செய்யப்பட்ட திருத்தத்தையும் எடுத்துக்காட்டப்பட்டது.

பொதுவாக சி. பி. கோ. விதி, அரசியல் சட்டத்திற்கு உடன்பாடு உடையதாக இருந்தாலும் இல்லாமற்போனாலும், அவ்விதியின்கீழ் அமைச்சர்கள் சலுகை பெறுவது என்பது, அரசியல் சட்டத்திற்கு முரண்பாடு உடையதா இல்லையா என்பதுதான் பிரஸ்தாப வழக்கின் உள்ளடக்கம்.

அமைச்சர் மீது வழக்குத் தொடர்ந்துள்ளவர் சார்பில், 'சி. பி. கோ. விதியானது, அரசியல் சட்டம் அடிப்படை உரிமை 14-வது விதிக்கு முரண்பட்டதாகும்—என்றும், எனவே, மனுதாரரின் கோரிக்கையான—'தாம் மன்றத்திற்கு நேரடியாக வராமல் இருக்க விலக்களிக்க வேண்டும்'—என்ற கோரிக்கை சட்டவிரோதமானதுஎன்றும் விவாதிக்கப்பட்டது.

அமைச்சர் பக்தவத்சலத்தின் கோரிக்கை மனுவை, மன்றச் செலவுடன் நீதிபதி தள்ளிவிட்டார்.

அவர் தீர்ப்பில் கூறியிருப்பதாவது:—

"நிலைமை ஒரே மாதிரியானதாக இருக்குமானால், அனைவருக்கும் ஒரே விதி பொருந்தக் கூடும் என்று அரசியல் சட்டம் 14-வது விதி தெளிவு படுத்துகிறது. ஆண்டி செய்தாலும், சீமான் செய்தாலும் கொலை கொலைதான்.

"அனைவரும் சமம் எனப் பிடிவாதமாகப் பேசுகிறவர்கள் கூட, குடியரசுத் தலைவர், துணைத் தலைவர், 'கவர்னர்கள் ஆகியோரைப் பொறுத்தவரையில், சிறப்பு நிலையில் உள்ளவர்கள் என்பதை ஒப்புகிறார்கள். யூனியனின் தனி அந்தஸ்தை அவர்கள் பிரதிபலிக்கின்றனர்; எனவே அவர்கள், தனி மனிதர்கள்—வாதப் பிரதிவாதங்கள் — கொள்கைக் கோட்பாடுகள்—அரசியல் ஆகியவைகளுக்கு அப்பாற்பட்டவர்களாக இருக்கின்றனர். அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள விலக்கை உயர்ந்த அரசாங்கக் கோட்பாடாகக் கொள்ளக்கூடும். ஆனால், அதே அந்தஸ்தில் ஒரு அமைச்சரைக் கொள்ளுவதும் நீதிமன்றத்திற்கு வராமல் இருக்க அவருக்கு விலக்கு அளிப்பதும் பொருந்தாது.

"ஆற்றுவதற்கான அதிகமான பணிகளைப் பெற்றிருப்பவர்கள், அவைகளையும் அதற்கு மேலும் பணியாற்றுவதற்கான அவகாசத்தைப் பெற்றிருக்கின்றனர். குறைந்த பணிகளையே ஆற்ற வேண்டியவர்கள், அவைகளை ஆற்றுவதற்கும் அவகாசம் இல்லாது சிலர் இருப்பதையும் பார்க்கின்றோம். பாலம், கடை முதலியவற்றை அடிக்கடித் திறக்க அவகாசம் பெற்றிருக்கின்ற அமைச்சர்கள், கொஞ்சம் முயற்சித்தால் நீதிமன்றத்திற்கு வந்து தங்களுக்குத் தெரிந்த விஷயங்களைக் கூறுவதற்கான அவகாசத்தைப் பெறுவதும் சாத்தியமாகும்.

"அவர்கள் (அமைச்சர்கள்) நிரம்ப முக்கியமானவர்கள்; ஆகவே, அவர்கள் மன்றத்திற்கு வருவது இழுக்கானது என வாதிடப்படுவதானால், வாதியின் வழக்கறிஞர் சுட்டிக்காட்டியதுபோல் அக்கால பிரபுத்துவ நடிப்பு நீடிப்பாகும் அது என்பது பொருத்தமானதாகிவிடுகிறது. அது ஒரு புதிய சாதியை ஆக்குவதில் வந்து முடியும். அது சகித்துக்கொள்ளக்கூடியதன்று.

"தேர்தல் நேரத்தில், தொலைவிலும் தவித்தும் கிடப்பதான சிற்றூர்களுக்குச் சென்று தங்களை ஆதரிக்கும்படிக் கெஞ்சிக்கேட்பதை, தங்களுடைய மதிப்புக்குக் கீழானது என்று அமைச்சர்கள் கருதுவது கிடையாது என்பதை நான் குறிப்பிடுவது நீதிநிலையில் நியாயமானதேயாகும்."

உப்பு உற்பத்தி

உப்பு உற்பத்தி விஷயத்தில் கடந்த நூறு ஆண்டுகளில் முதல் தடவையாக 1951-ம் வருஷத்தில் தான் இந்தியா தன்னிறைவு நிலையை எய்தியது.

உப்புத் தொழில் நிரந்தர மூலதனமாக மொத்தம் சுமார் ரூ. 8,30,00,000 முதலீடு செய்யப்பட்டிருக்கிறது; இதில் பொதுத் துறையில் ரூ. 1,07,00,000; தனியார் துறையில் ரூ. 7,23,00,000 முதலீடு செய்யப்பட்டிருக்கிறது.

உப்பு உற்பத்தித் தொழிலில் 1955-ம் ஆண்டில் நாள்தோறும் சுமார் 29,300 தொழிலாளர்கள் வேலைசெய்து வந்தனர்; இதில் 3,530 பேர் சர்க்கார் உப்பளங்களிலும், 25,770 பேர் தனியார் உப்பளங்களிலும் வேலை செய்தனர். இவை தவிர, லைசென்சு பெற்றிராத உப்பளங்களிலும் சராசரியாக நாள் ஒன்றுக்கு சுமார் 10,000 தொழிலாளர்கள் வீதம் வேலை செய்தனர்.

உப்பு உற்பத்தி 1953-ல் உச்ச நிலையை எய்தியது; அவ்வருஷத்தில் மொத்தம் 8,60,00,000 மணங்கு உப்பு உற்பத்தி செய்யப்பட்டது.

தற்போதிருந்து வருகிற உப்புத் தொழிற்சாலைகளின் அபிவிருத்திக்காக இரண்டாவது திட்டத்தில் ரூ. 189 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது தவிர, மண்டி உப்புச் சுரங்கங்களின் அபிவிருத்திக்காக ரூ. 1—கோடி செலவிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

விஞ்ஞானம் வளருகிறது!

சூரிய சக்தியிலிருந்து அணு சக்தியை உருவாக்க முயற்சி

நீர்வளிக்குண்டின் அணுசக்தியை ஆக்கவேலைக்குப் பயன்படுத்துவதற்கான வகையில் கருவி ஒன்றை உருவாக்கும் திட்டத்தை அமெரிக்க அணுசக்திக் குழுத் தலைவர் வெளியிட்டுள்ளார்.

ஆக்க வேலைக்கு சூரிய சக்தியை அணுசக்தியாக்கும் பணியில் இது பெரிய முயற்சியாகுமாம்.

அணுக்களை வெடிப்பதால் உண்டாகும் சக்தியை வெப்ப—அணு வெடிப்பு மூலம் பெறும் சக்தி எதிர்காலத்திற்கு நன்மையாகுமாம்!

'ஸ்டெல்லரேடர்' என்ற பெயருள்ள இந்தக் கருவியை உருவாக்குவதற்குப் பெரும் தொகையை முதலீடு செய்ய வேண்டுமாம்!

நட்சத்திரங்களிலிருந்து சக்தியை உண்டாக்குவதான 'ஸ்டெல்லர்' (நட்சத்திரங்கள்)—'ஜெனரேட்டர்' (சக்தி உற்பத்திக் கருவி) ஆகிய இரு வார்த்தைகளையும் ஒன்று சேர்த்து 'ஸ்டெல்லரேடர்' என்று பெயரிடப்பட்டிருக்கிறது.

செய்திச் சுருள்

★

சேலம் மாவட்ட துவக்கப் பள்ளி ஆசிரியர்கள் மாநாடு

24—3—57 காலை 10 மணிக்கு சேலம் மாவட்ட துவக்கப் பள்ளி ஆசிரியர்கள் சங்க நிர்வாகக் குழுக் கூட்டமும், வரவேற்புக் குழுக் கூட்டமும் திரு. டி. தங்கராசு தலைமையில் நடைபெற்றபோது, மேற்படி சங்க மூன்றுவது மாநாட்டை சேலம் நகரில் மே மாதம் 5-ந்தேதி நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

எல்லா ஆசிரியர்களும் நிதியைத் துரிதமாக வசூலித்து, உடனடியாக செயலாளர் முகவரிக்கு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கொடிக்கால் விவசாயிகள் சிறப்பு மாநாடு

தற்போது அமுலிலுள்ள சாகுபடியாளர் பாதுகாப்பு மசோதாவில் வெற்றிலை சாகுபடியாளர்களுக்கு நிலமாற்றம் தரப்படுகிறது. அதனல் சுமார் 10 இலட்சம் வெற்றிலை விவசாயிகளுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படும். எனவே மேற்படி மசோதாவில் தகுந்த பாதுகாப்பு அளிக்குமாறு வற்புறுத்த தமிழ் நாடு கொடிக்கால் விவசாயிகள் இரண்டாவது மாநில சிறப்பு மாநாடு மதுரையில், ஏப்ரல் மத்தியில் நடைபெறும் என்று சங்கப் பொதுச்செயலாளர் அறிவிக்கிறார்.

சென்னை-செயலட்சுமிபுரம் மக்கள் மன்றம்

23—3—57-ல் சென்னை—நுங்கம்பாக்கத்திலுள்ள 'செயலட்சுமிபுரம் மக்கள் மன்ற'த்தை தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி துவக்கி வைத்தார். துவக்கவிழா சொற்மொழிவு முடிந்தவுடன் குழந்தைகளுக்கு பாலும்—இனிப்பும் வழங்கப்பட்டது.

குடியேற்றம் — நெல்லூர்பேட்டை மக்கள் மறுமலர்ச்சி மன்றம்

26—3—57-ல், மேற்படி மன்றத்தின் நிர்வாகிகள் தேர்வு தோழர் கு. சி. பொன்சாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் மு. காளியப்பன் செயலாளராகவும், எம், ஏ. ருத்ரப்பன் துணைச்செயலாளராகவும், ஏ. சி. குப்புசாமி பொருளாளராகவும், மற்றும் 16 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டது.

மேலக்கற்கண்டார்கோட்டை (பொன்மலை) ஞாயிறு படிப்பகம்

24—3—57 மாலை 6-30 மணி அளவில் மேற்படி படிப்பகத் திறப்பு விழா ஐ. இராமசாமி தலைமையிலும் தோழர் எஸ். அல்லாபிச்சை முன்னிலையிலும் நடைபெற்றது. தோழர்கள் பலர் பேசியபின், தோழர்கள் ஐ. இராமசாமி கவுரவத் தலைவராகவும், கோ. வெங்கடேசன் காப்பாளராகவும், இரா. பெருமாள் துணைக் காப்பாளராகவும், கோவிந்தராசன் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இராமநுசம்புதூர் ஆதிதிராவிட நலவுரிமைச் சங்கம்

11—3—57 இரவு 8-30 மணிக்கு பம்பாய், தாராவியில் மேற்படி சங்க மாதாந்திரக் கூட்டம் தோழர் பி. எஸ். வடிவேல் தலைமையில் நடைபெற்றபோது, தோழர் ஆர். ஏ. சுப்பையாவைத் தலைவராகக் கொண்ட நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

16—3—57 மாலை 7-30 மணிக்கு மேற்படி சங்கத்தின் 6-வது ஆண்டு நிறைவுவிழா தோழர் எஸ். வடிவேல் தலைமையில் நடைபெற்றது; தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர்; அம்பேத்கார், நாகம்மையார் படத் திறப்பு விழாவும் நடைபெற்றது.

கோவை 23-வது வட்ட உதயசூரியன் படிப்பகம்

24—3—57 மாலை 7 மணிக்கு, தோழர் எம். சண்முகம் தலைமையில் தோழர் சி. டி. தண்டபாணி அவர்கள் மேற்படி படிப்பகத்தைத் திறந்துவைத்தார். தோழர்கள் பலர் பேசியபின், இரு முக்கியத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

விளாத்திகுளம்—சிவல்பட்டி பகுத்தறிவுப் படிபபகம்

22—3—57-ல், இக்கிராமத்தில் தோழர் பி. தங்கவேலவன் தலைமையுல் 'பகுத்தறிவு படிப்பக' துவக்க விழா நடைபெற்றது. தோழர் சார்லஸ் மதுரம் தலைவராகவும், பாண்டி துணைத் தலைவராகவும், பொன்னையா செயலாளராகவும், செல்லச்சாமி பாண்டியன் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சென்னை—வண்ணை தமிழ் இளைஞர் கழகம்

23—3—57 மாலை, கழக மனையில், தோழர் பி. வி. பாண்டியன் தலைமையில் நடைபெற்ற உறுப்பினர் கூட்டத்தில் முக்கியத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத் துவக்க விழா

21—3—57 அன்று சத்திரப்பட்டியில் ஜெயகோபாலன் நெசவாளர் கூட்டுறவு சங்கத் துவக்க விழா, திரு. சிவகாமிநாதன் தலைமையில் நடைபெற்றது; திரு. எஸ். இராசையா சங்கத்தைத் துவக்கிவைத்தார்.

24—3—57 பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்ற மேற்படி சங்க உறுப்பினர்கள் கூட்டத்தில் திரு. கா. ம. க. சின்னக்குருசாமியைத் தலைவராகக் கொண்ட நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

சென்னை மக்கள் பணி மன்றம்

24-3-57ல், சென்னை 16-வது வட்ட அண்ணுப் பிள்ளை வீதி, எண். 67 இல்லத்தில் தோழர் ஆர். கண்ணன் தலைமையில் துவங்கிய 'மக்கள் பணி மன்ற'த்திற்கு, தோழர்கள் செ. சண்முகசுந்தரம் தலைவராகவும், எம். ஆர். கண்ணபிரான் துணைத் தலைவராகவும், வ. செயல்ராமன் செயலாளராகவும், த. தாயமணி துணைச் செயலாளராகவும், சி. ஆர். இராமச்சந்திரன் பொருளாளராகவும், மற்றும் பலர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அரியலூர் முத்தமிழ் மன்ற அமைப்பு கூட்டம்

12—3—57ல், அரியலூர் தோழர் எஸ். கே. ஏ. முருகையா இல்லில், தோழர் மு. மருதமுத்து தலைமையில் நடைபெற்ற முத்தமிழ் மன்ற அமைப்புக் கூட்டத்தில் செயலாளராகத் தோழர் சி. கோவிந்தசாமி - துணைச்செயலாளராகத் தோழர் மு. பொன்னையன் — பொருளாளராகத் தோழர் அயிலு ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கூட்டத்தில் தீர்மானமொன்றும் நிறைவேற்றப்பட்டதோடு, தோழர்கள் இராம-அரங்கராசன், இராகவன் சொற்பொழிவாற்றினர்.

அபிராமி பலசரக்கு வியாபாரிகள் சங்க ஆண்டு விழா

24—3—57 காலை 10 மணிக்கு மேற்படி சங்க ஆண்டு விழா திரு. எம். எஸ். டி. பாலசுப்பிரமணியம் செட்டியார் தலைமையில் நடைபெற்றது; பலர், ஒரு முனை விற்பனை வரிச் சட்டத்தின் தேவையை உணர்த்திப் பேசினர்; மூன்று முக்கியத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சென்னை—இராயபுரம் நெடுஞ்செழியன் பகுத்தறிவு மன்றம்

24—3—57 காலை 10 மணிக்கு மேற்படி மன்றம், நாகாத்தம்மன் கோவில் வீதி, பி. சி. பி. சந்து, 7-ம் எண்ணுள்ள இல்லத்தில் அமைக்கப்பட்டது. தோழர்கள் அன்புரோசு செயலாளராகவும், ச. ஆரோக்கியதாசு துணைச்செயலாளராகவும், எஸ். புட்பரத்தினம் பொருளாளராகவும், எஸ். லாசஸ் துணைப் பொருளாளராகவும், மு. த. இளஞ்சேரன், தி. ப. மதிவாணன், இங்கர்சால், என். ஏ. தாசு, பா. ஆ. ஆரி, ஜெய்பால், எஸ். தாசு, இருதயராசு, பழனி ஆகியோர் செயற்குழுவினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பழனி 'நெல்லிக்குப்பம் மஜீத் நினைவு மன்றம்'

26—3—57 இரவு 9 மணியளவில், பழனி 11-வது வட்ட கோட்டை மேட்டுத் தெருவில், தோழர் பி. எஸ். ஷேக் தலைமையில் நடைபெற்ற மேற்படி மன்ற அமைப்புக் கூட்டத்தில் தோழர்கள் பி. எம். சமுசுதீன் செயலாளராகவும், எம். பி. காதர் பாட்சா துணைச் செயலாளராகவும், க. எகையா பொருளாளராகவும் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவ்வமைப்பு பழனி நகர தி. மு. கழகத்தோடு இணைந்து வேலை செய்வதென முடிவெடுக்கப்பட்டது.

பொன்மலை திருக்குறள் கழகம்

24—3—57ல் நடைபெற்ற மேற்படி கழகக் கூட்டத்தில், திரு. உத்திரா அரங்கத்தாசு அவர்களைத் தலைவராகக் கொண்ட நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

சிறப்புக் கூட்டம்

மாலை 6-30 மணி அளவில் கழகத்தின் 11-வது ஆண்டு 15-வது சிறப்புக் கூட்டம் இரயில்வே படிப்பகத்தில் நடைபெற்றது. திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் 'நான் கண்ட மலாயா' என்னும் பொருள் பற்றிப் பேசினர்.

கழகச் செய்திகள்

நெல்லை - கன்னிகுளம்

24—3—57 இரவு 8½ மணியளவில் கன்னிகுளம் தி. மு. கழக உறுப்பினர்கள் கூட்டம் தோழர் எம். கே. சபாபதி தலைமையில் நடைபெற்றது. அதுபோது தேர்தலில் வெற்றி பெற்ற தோழர்களுக்கு பாராட்டு தெரிவித்தும், ஆண்டு விழா நடத்துவது பற்றியும் தீர்மானிக்கப்பட்டதோடு தோழர் எம். கே. சபாபதி தலைமையில் ஆண்டு விழா குழு அமைக்கப்பட்டது.

திருவனந்தபுரம்

28—3—57 இரவு 10 மணிக்கு திருவனந்தபுரம் தி. மு. கழக செயற்குழுக்கூட்டம் செயலாளர் தலைமையில் நடைபெற்றபோது சென்னை சட்ட மன்ற தேர்தலில் வெற்றி பெற்ற தோழர்களைப் பாராட்டியதுடன், பல முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தோழர் சுபேர் சொற்பொழிவாற்றிய பின், தோழர் சுப்பராயலு இனிப்பு வழங்கினர்.

இராசபாளையம்

24—3—57 மாலை 5 மணிக்கு, நகர தி. மு. க. சார்பில், பி. எஸ். குமாரசாமி இராசா அவர்களின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து, தோழர் ஆர். பி. ஆதிநாராயணன் தலைமையில் நூற்றுக்கணக்கான கழகத் தோழர்கள் கருப்பு சின்னமணிந்து ஊர்வலமாக சென்று, திரு. இராசா அவர்களின் சமாதிக்கு மாலை போட்டு அஞ்சலி செலுத்தினர். இரவு 7 மணிக்கு 'பஸ் ஸ்டாண்டு'க்குக் கீழ்ப்புறமுள்ள திடலில் தோழர் சோ. சேது இராமலிங்கம் தலைமையில் நடைபெற்ற இரங்கற் கூட்டத்தில் தோழர்கள் பெ. சு. இராசசேகரன், பாலகிருஷ்ணன் ஆகியோர் பேசினர். கூட்டத்தில், நகர மத்தியில் திரு. இராசாவின் சிலையொன்று எழுப்புமாறு நகர சபையைக் கேட்டுக்கொண்டும், திரு. இராசாவின் குடும்பத்தாருக்கு அனுதாபம் தெரிவித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பம்பாய் - கம்பாலாஹில்

11—3—57 இரவு 10-30 மணியளவில், பம்பாய் - கம்பாலாஹில் தி. மு. க. கிளையின் உறுப்பினர்கள் கூட்டம் தோழர் கை. சுப்பையா தலைமையில் நடைபெற்றபோது, வரவு-செலவு கணக்கு ஒப்புக்கொள்ளப்பட்டு, தோழர்கள் சேவியர், இராமையா, விசயமன்னன், அன்பழகன், நவயுவன் முதலியோர் பேசினர்.

25—3—57 இரவு 10-30 மணிக்கு, மேற்படி கிளையின் செயற்குழு கூட்டம், ஆறிஅலித் திடலில் தோழர் கை. சுப்பையா தலைமையில் நடைபெற்றபோது, புது செயற்குழு அமைப்பது பற்றியும் உறுப்பினர்கள் சேர்ப்பது பற்றியும், மற்றும் பல முக்கியப் பிரச்சினைகள் பற்றியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டபின், தோழர்கள் அன்பழகன், அரங்கண்ணல் ஆகியோர் பேசினர்.

இலங்கை-யாழ்ப்பாணம்:

24—3—57 மாலை 4 மணியளவில், யாழ்ப்பாணம் தி. மு. கழகக் கிளை உறுப்பினர் கூட்டம் தோழர் இரா. திருமாறன் தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் இரா. அதிமணி, ஏ. இளஞ்செழியன், மதிமுகன், சங்கமாறன், ஆறுமுகம் ஆகியோர் கழக வளர்ச்சி பற்றியும், ஆக்க வேலை குறித்தும் சொற்பொழிவாற்றினர். பின், வரும் மே தின விழாவைக் கொண்டாடுவது பற்றியும், தாழ்த்தப்பட்ட மக்களிடம் தொண்டாற்றுவது பற்றியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதோடு, தோழர்கள் இரா. திருமறவன் செயலாளராகவும்; க. இராவணன், வை. மதிமுகன் துணைச் செயலாளர்களாகவும்; அன்பரசு பொருளாளராகவும்; பெருமாள், வி. சின்னத்தம்பி, சொ. சி. சேகரன், சண்முகதாசன், எஸ். ஆறுமுகம், க. சபாரெட்னம், பெரு. சங்கமாறன், கருணாகரன், வேல்சாமி, திருநாவுக்கரசு, அ. செழியன், தமிழன்பன் ஆகியோர் செயற்குழு உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இடைப்பாடி—ஆலச்சம்பாளையம்

28-3-57-ல் இடைப்பாடியை அடுத்துள்ள ஆலச்சம்பாளையம் தி. மு. கழக துவக்க விழாவில் தோழர்கள் வை. மாரிமுத்து செயலாளராகவும், வி. காளியப்பன் துணைச் செயலாளராகவும், சு. காளியப்பன் பொருளாளராகவும், வை. மாரிமுத்து மாவட்ட பிரதிநிதியாகவும், மற்றும் 15 பேர் செயற்குழுவினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மாலை 6 மணிக்கு மேற்படியூர் மாரியம்மன் கோவில் திடலில் திரு. மொட்டையக் (கவுண்டர்) தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், தோழர்கள் ப. இராமலிங்கம் கொடியேற்றி வைத்தும், ஏ. கே. கே. இராசமாணிக்கம் திறப்பு விழாவும், இரா. தாண்டவன், பா. பண்டரிநாதன், டி. கே. குருநாதன், சோ. மாரியப்பன் ஆகியோர் கழகக் கொள்கைகளைப் பற்றியும் சொற்பொழிவாற்றினர்.

ஆனகாபுத்தூர்

ஆனகாபுத்தூர் தி. மு. கழக உறுப்பினர் கூட்டம் தோழர் சி. இராமலிங்கம் தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் ஆர். மணி செயலாளராகவும், எஸ். கன்னியப்பன் துணைச் செயலாளராகவும், எம். நடராசன் பொருளாளராகவும், சி. இராமலிங்கம் மாவட்ட உறுப்பினராகவும், எம். கலியாணசுந்தரம், எம். கிருஷ்ணன், ஆர். ரங்கன், சி. கே. ஜி. சாமி, பி. இராஜி, எம். தாமோதரன், கே. பெருமாள், எம். வரதன் ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

நன்றியறிவிப்பு

பொதுத் தேர்தலில் இராசிபுரம் தொகுதியில் போட்டியிட்ட எனக்குத் தங்கள் வாக்குரிமையை அளித்த பொது மக்களுக்கும், இரவு பகலெனப்பாராது அயராது உழைத்த தி. மு. கழகத் தோழர்களுக்கும் எனது நன்றி கலந்த வணக்கத்தை உரித்தாக்குகிறேன்.

அன்பன்
கே. வி. கே. இராமசாமி

★

நடைபெற்ற சென்னை சட்டசபைத் தேர்தலில் நாகை தொகுதிக்கு தி. மு. கழக சார்பில் போட்டியிட்ட எனக்குப் பேராதரவு தந்து, பலன் கருதாது நேர்மைக்கும், நீதிக்கும் பாடுபட்ட பெரியோர்களுக்கும் தோழர்களுக்கும், நண்பர்களுக்கும், தாய்மார்களுக்கும், கழகத் தோழர்களுக்கும் எனது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் நாட்டிற்கும் — தொகுதிக்கும் என்றென்றும் தொண்டாற்ற காத்திருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்வதுடன், எனக்கு வாக்களித்த வாக்காளர் அனைவருக்கும் தேர்தலில் நேர்மையின் பக்கமிருந்து எனக்கு ஆதரவு தந்த முஸ்லிம்லீக் தலைவர் ஆலிஜனுப் எம். முகம்மது இஸ்மாயில் அவர்களுக்கும் என் இதயம் நிறைந்த நன்றியையும்-அன்பையும் காணிக்கையாக்குகிறேன்.

அன்பன்
நாகூர்-இ.எம். அனிபா

பொதுத்தேர்தலில் குன்னூர் தொகுதியில் தி. மு. க. சார்பில் போட்டியிட்ட எனக்கு வாக்களித்த பெரியோர்களுக்கும், தோழர்களுக்கும், தாய்மார்களுக்குப், எனக்காக அயராது உழைத்த தொழிலாளர்களுக்கும், கழகத் தோழர்களுக்கும் நிதிஉதவி செய்தவர்களுக்கும் என் உளங்கனிந்த நன்றியை அறிவித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்.

அன்பன்
வி. கா. ஒளியழகன்

★

நடைபெற்ற பொதுத் தேர்தலில் திருச்செங்கோடு தொகுதியில் தி. மு. கழகச் சார்பில் போட்டியிட்ட எனக்கு தங்கள் வாக்குகளை அளித்த பொது மக்களுக்கும் எனக்குத் துணையாகவும் — கழகத்தின் பொறுப்பை பல பகுதிகளிலும் எடுத்துக்காட்டிய தோழர்களுக்கும் எனது உளங்கனிந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்பன்
ஆர். முத்துசாமி

★

பொதுத் தேர்தலில் சென்னை சட்டசபைக்கு நாமக்கல் தனித் தொகுதிக்கு தி. மு. கழகச் சார்பில் போட்டியிட்ட எனக்கு, வாக்களித்த வாக்காளர்களுக்கும், இரவு பகல் பாராமல்—பணி பல புரிந்து ஆதரித்த கழகத் தோழர்களுக்கும் என் மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பன்
அ. மருதைவீரன்

இந்திய சர்க்கார் வெளி விவகார இலாகாவினரின் ஊதாரித்தனம்!

வாடகைக் கட்டடங்களுக்காக பலனற்ற முறையில் ஏராளமான பணம் செலவழிப்பு

அலுவலின்றியே ஆறு ஆண்டுகளாக வாடகை செலுத்திய விசித்திரம்

மக்கள்சபை பொதுக் கணக்குத் தணிக்கைக் குழு தரும் தகவல்கள்

பார்லிமெண்டின் பொதுக் கணக்குக் குழு, மக்கள்சபையில் சமர்ப்பித்த 23-வது அறிக்கையில், சர்க்காரும், ஹை-கமிஷனர்களும் வாடகைக் கட்டடங்களுக்காகப் பலனற்ற முறையில் ஏராளமாகப் பணம் செலவழித்திருப்பதைச் சுட்டிக்காட்டி, வன்மையாகக் கண்டித்திருக்கிறது.

அவ்வறிக்கையில் காணப்படும் குறிப்புகளாவன :—

"ஒரு குறிப்பிட்ட நாட்டில் தூதுவர் அலுவலகம் ஒன்று ஏற்படுத்த 1949-ம் ஆண்டில் இந்திய சர்க்கார் நினைத்து, அதற்கு அருகிலிருந்த நாட்டில் ஹை-கமிஷனராக இருந்தவரையே அந்த நாட்டிலும் தூதுவராகப் பணியாற்றும்படி கேட்டுக்கொண்டது. ஆனால், பார்லிமெண்டு கிராந்த நிதிக் குழு தனியானதொரு கட்டடத்திற்கு அனுமதி தராமல், ஹை-கமிஷனர் அந்நாட்டிற்குச் சென்று வருவதற்கான பிரயாணச் செலவைக் கொடுக்க வேண்டுமென சிபாரிசு செய்தது.

"ஆனால், அடுத்த ஆண்டில் ஹைகமிஷனரின் வேண்டுகோளுக்கிணங்க வாடகைக் கட்டடத்திற்காக ரூ. 12,000; மற்றச் செலவுகளுக்கு ரூ. 3333; கட்டடத்தைச் செப்பனிட ரூ. 40,000 என, இந்திய சர்க்கார் அனுமதித்தது. ஆனால், பின்னர் கட்டடத்தை வாடகைக்கு விடுவதற்கான பேச்சுவார்த்தைகள் முறிந்துவிட்டன.

"உடனடியாக மற்றொரு கட்டடத்தை ஆண்டொன்றிற்கு ரூ. 9,800 வாடகையில் 15 ஆண்டுகளுக்கு, அரசாங்கத்தின் அனுமதியின்றியே ஹைகமிஷனர் காரியாலயம் எடுத்துக்கொண்டது. ஆனால், தூதுவராலயத்திற்கு வேண்டிய ஊழியர்கள் கிடைக்கவில்லையாதலால் இந்தப் புதிய கட்டடம் பயன்படுத்தப்படவில்லை. இந்தக் கட்டடத்தை வாடகைக்கு வாங்கும்போது நல்ல நிலைமையில் இருந்ததாயும், தற்பொழுது செப்பனிடவேண்டிய நிலையில் இருப்பதாயும் தெரிகிறது.

"1954-ம் ஆண்டில் கட்டடத்தைச் செப்பனிட ரூ. 60,000 செலவழிக்கப்பட்டிருப்பதாக மதிப்பிடப்படுகிறது. 1956-ம் ஆண்டில், கட்டடத்தின் சில பகுதிகளின் சீரழிந்த நிலையைச் செப்பனிட ரூ. 18,667 செலவழிக்கப்பட்டது.

"குத்தகை நிபந்தனைப்படி, அக்கட்டடத்தைவேறொருவருக்கு விடக்கூடாதாகையால், ஆறு ஆண்டுகளாக அக்கட்டடத்திற்கு அநாவசியமான வாடகை தரவேண்டியிருந்தது; அன்றியும் அவ்வப்பொழுது பழுதுகளும் பார்க்கவேண்டியிருந்தது.

"இன்னும் 9 ஆண்டுகளுக்கு சர்க்கார் அதற்குரிய வாடகையையும், வரியையும் கொடுப்பதுடன் அதை திருப்பிக் கொடுக்கும்போது செப்பனிட்டுச் சீரான நிலையில் கொடுக்கவேண்டும்.

"இதற்கிடையில், ஹைகமிஷனர் அவ்வப்பொழுது அந்த நாட்டிற்குச் சென்று வர 1955-ம் ஆண்டு வரையில் ஓட்டல் செலவுக்காக ரூ. 16,067 செலவு செய்திருக்கிறார்.

"இப்பிரச்னையில், அரசாங்கமும் ஹைகமிஷனரும் நடந்து கொண்ட விதத்தை குழு கண்டித்திருக்கிறது.

இது போன்ற அலுவலகம் அரசியல் காரணத்திற்காக உடனடியாக நிறுவ வேண்டியிருந்தாலும், வெளிநாட்டு இலாகாவினர் வாடகைக் கட்டடத்திற்குச் சிபாரிசு செய்தனர்; ஆதலால், வாடகைக் கட்டிடத்திற்கான உடன்படிக்கை தோல்வியடைந்ததும் குறிப்பிட்ட விஷயம் குறித்து புதிய முறையில்ஆராய்ச்சி நடத்தியிருக்கவேண்டும்.

"மேலும், தூதுவர் காரியாலயத்திற்குத் தேவையான சிப்பந்திகள் நிச்சயம் செய்யப்படாமல், காரணமற்ற முறையில் 15 ஆண்டுகளுக்கு இரண்டாவது கட்டடத்தை ஹைகமிஷனர் வாடகைக்கு எடுத்துக் கொண்டது நீதியற்றதாகும்.

"இந்தப் பிரச்னையில் நிதி ஆலோசகர் கலந்து ஆலோசிக்கப்பட்டாரா என்பதைக் குழு அறிய விரும்புகிறது; அப்படியாயின், அவர் கூறிய யோசனை என்ன என்று கேட்டுள்ளது.

"இதுகுறித்து, அமைச்சர் காரியாலயம் எந்தவிதமான தகவலும் கொடுக்கவில்லை.

"இதனால், மந்திரி சபை எந்த விதமான குற்றத்திற்கும் சம்பந்தப்பட்டதல்ல என்று கருதுவதற்கில்லையென குழு கருதுகிறது. இவ்வளவு பெருந்தொகையில் கட்டடம் வாடகைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பின்னர் மந்திரிசபை போதுமான ஆட்களை நியமிக்க ஏன் துரிதமான நடவடிக்கை எடுத்துக் கொள்ளவில்லை என்பதை தெளிவாகக் குறிப்பிடவில்லை.

"மேலும், கட்டிடத்தை வாடகைக்கு எடுத்து ஆறு ஆண்டுகளாகியும், அங்கு போதுமான முறையில் காரியாலயம் ஆரம்பிக்கப்படாமல் இருப்பது குழுவினருக்கு ஏமாற்றமளிக்கிறது என்று அறிவித்துள்ளனர்.

"சமீப எதிர்காலத்தில் மீண்டும் தூதுவராலயத்தை ஏற்படுத்த தகுந்த அதிகாரிகள் கிடைப்பது கஷ்டமானால் அக்கட்டடத்தைச் சொந்தக்காரரிடம் திரும்ப ஒப்படைத்துவிடலாம் என்று குழு யோசனை கூறியிருக்கிறது."

வெற்றிவெற்ற தி.மு.க. உறுப்பினர்களுக்குப் பாராட்டு

பெத்தாம்பாளையம் பழனிச்சாமி பாராட்டினர்

சென்னை, ஏப். 4—

31—3—57-ல் சென்னை கடற்கரையில் தி. மு. க. சட்டசபை—பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு நடைபெற்ற பாராட்டுக் கூட்டத்தில் தோழர் பெத்தாம்பாளையம் பழனிச்சாமி அவர்கள் தேர்தலில் வெற்றி பெற்ற அண்ணா உட்பட மற்ற தோழர்களுக்கு மலர்மாலைகள் அணிவித்துப் பாராட்டினர்.

கழகக் கூட்டம்

வேதாரண்யம் :

இராஜாஜி பூங்காவில்

5—4—57

தலைவர் : வை. சுப்பிரமணியம்

பேசுவோர் :

ந. தருமலிங்கம்

ம. அம்பிகாபதி

மன்னார்குடி சுந்தரேசன் இயக்கப் பாடல்கள் பாடுவார்.

ஒரு பெண்மணி உட்பட 11 பேர் கொண்ட கேரள அமைச்சரவை

ஏப்ரல் 5-ந் தேதியன்று பதவி ஏற்கிறது

திருவனந்தபுரம், ஏப். 3—

முதன் முறையாகக் கேரளத்தில் அமையும் கம்யூனிஸ்டு சர்க்காரின் அமைச்சர்களின் பட்டியலை, கேரள கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் நம்பூதிரிபாட் அவர்கள் கவர்னரிடம் சமர்ப்பித்துவிட்டார்.

ஏப். 5-ந் தேதி காலை 11 மணியளவில் இந்த அமைச்சரவை விசுவாசப் பிரமாணம் எடுத்துக் கொண்டு பதவி ஏற்கும்.

அமைச்சரவையில் 11 பேர் இடம் பெற்றுள்ளனர்; அதில் ஒரு பெண்மணியும், இரு சுயேச்சையினரும் உள்ளனர்.

அமைச்சர்களின் பெயர்கள் வருமாறு :—

1. நம்பூதிரிபாட்; 2. சி. அச்சுத மேனன்; 3. கே. ஜி. ஜார்ஜ்; 4. கே. பி. கோபாலன்; 5. டி. வி. தாமஸ்; 6. பி. கே. சாத்தன்; 7. டி. ஏ. மஜீத்; 8. ஜோசப் முண்டசாரி; 9. வி. ஆர். கிருஷ்ணய்யர்; 10. டாக்டர் ஏ. ஆர். மேனன்; 11. குமாரி கே. ஆர். கௌரி.

அமைச்சரவை அமைப்புக்கு

அவகாசம் கோருகிறார்

கவர்னரைச் சந்தித்தபின் காமராசரின் நிலைமை?

சென்னை, ஏப். 4—

புதிய சட்டசபை காங்கிரஸ் கட்சித் தலைவரான கே. காமராசர், நேற்று காலை கவர்னரைச் சந்தித்து, மந்திரி சபை அமைப்பதற்குத் தனக்குச் சிறிது அவகாசம் தரும்படி கேட்டுக்கொண்டாராம்.

காரணம், மந்திரி சபையில் எவரெவருக்கு இடமளிப்பது என்பதை உடனடியாக முடிவு செய்ய இயலாதிருப்பதுதான் என்று தெரியவருகிறது.

அமைச்சரவை பட்டியலை முடித்துக்கொண்டபின், காமராசர் டில்லிக்குச் சென்று திரும்புவாராம்!

மந்திரி சபை அமைப்புப் பிரச்சினையோடு சட்டசபைத் தலைவர்—துணைத் தலைவர் பிரச்சினைக்கும் தீர்வு காண்பதற்குக் காமராசர் முயலுவதாகக் கூறப்படுகிறது.

யானை உண்ட விளாங்கனியா?

சிங்கப்பூர், ஏப். 2—

இங்குள்ள 'பாங்க் ஆப் இந்தியா'வின் பிரும்மாண்டமான எஃகு அறையிலிருந்த சுமார் ரூ. 1,24,440 மதிப்புள்ள ரொக்கப் பணமும், நகைகளும் திடீரெனக் காணப்படவில்லையாம்.

அறைக்குக்குப் போடப்பட்ட எட்டு பூட்டுகள் பூட்டியபடியே இருக்கிறதாம்.

அண்ணா சுற்றுப்பயணம்

ஏப்ரல்

6 : களம்பூர்

7 : காலை — திருமணம் தேனும்பேட்டை.

,, மாலை — கோமளீஸ்வரன் பேட்டை, திருவல்லிக்கேணி பொதுக்கூட்டங்கள்.

14 : குளித்தலை

15 : மாலை 5 மணி-பொன்மலை இரவு 8 மணி—திருச்சி

16 : பெரம்பலூர் பகுதி

17 : நெல்லிக்குப்பம்

அண்ணா

மற்றும்

கழகத் தோழர்களுக்கு களம்பூரில் வரவேற்பு

6—4—57 மாலை 4 மணிக்கு, களம்பூரில், தேர்தலில் வெற்றி பெற்ற அண்ணா அவர்களையும், தோழர்கள் ப. உ. சண்முகம், சந்தானம், எம். பி. சாரதி, எஸ். எம். அண்ணாமலை, இரா. தருமலிங்கம் ஆகியோரையும், களம்பூர் விவசாயத் தோழர்களும், நெசவாளத் தோழர்களும் தங்கள் கருவிகளோடு ஊர்வலமாக அழைத்துச் செல்வர். 5 மணியளவில் 'தமிழர் படிப்பகம்' திறந்துவைக்கப்படும். பின், களம்பூர் தருமராசாகோவில் திடலில், தோழர் கே. சி. அப்புநு தலைமையில் ஓர் வரவேற்புக் கூட்டம் நடைபெறும். வெற்றி பெற்ற அனைவருக்கும் வரவேற்பிதழ் வாசித்தளிக்கப்படும். தோழர்கள் போளூர்-சுப்பிரமணியம், களம்பூர்-தெ. கோ. தங்கவேலு, மற்றும் பலர் சொற்பொழிவாற்றுவர். இரவு 10 மணிக்கு, 'வெற்றிவீரன்' என்ற நாடகம் நடைபெறும்.

பஞ்சசீலக் கொள்கையின் எதிரொலி?

எதிர் காலத்திலும் கோவா பகுதிகள் போர்ச்சுகல் வசமே இருக்குமாம்?

போர் வீரர்களிடை குரலெழுப்புகிறார் தற்காப்பு மந்திரி

லிஸ்பன், ஏப். 3—

"போர்ச்சுகீசிய இந்தியா இன்னமும் நம் வசமே உள்ளது; எதிர் காலத்திலும் அது நம் மிடமேதான் இருக்கும்" என்று போர்ச்சுகீசியத் தற்காப்பு இலாகா அமைச்சர் கர்னல் பெர்னாண்டோ, கோவாவிற்குப் புறப்பட்ட 1,400 போர்வீரர்களிடை பேசுகையில் கூறியுள்ளார்.

இந்தியப் போர்ச்சுகீசியப் பகுதிகளிலுள்ள படையினருக்கு ஓய்வு தருவதற்காகக் கப்பலொன்றின் மூலம் அப்படையினர் இந்தியாவுக்கு வருகின்றனர்.

நேரு அமைச்சரவை இராஜினாமா

ஏப்ரல் 15-ல் புதிய மந்திரி சபை பதவி ஏற்கும்?

புதுடில்லி, ஏப். 3—

இப்போதுள்ள மக்கள் சபை ஏப்ரல் 4-ந் தேதி கலைக்கப்படும்.

ஏப்ரல் 5-ந் தேதியன்று மத்திய அரசாங்க அமைச்சரவை பதவியிலிருந்து விலகவேண்டியிருப்பதால் பண்டித நேரு உட்பட மத்திய அமைச்சர்கள் அனைவரும் இராஜினாமா செய்வார்கள்.

அமைச்சரவையின் இராஜினாமாவை, குடியரசுத் தலைவரிடம் பண்டித நேரு சமர்ப்பிப்பார்.

அடுத்த அமைச்சரவை அமைக்கப்படும்வரையில் இப்போதுள்ள மந்திரி சபையே தொடர்ந்து நீடிக்கும்.

புதிய அமைச்சரவை ஏப்ரல் 15-ந் தேதி பதவி ஏற்கக்கூடும் என்று தெரியவருகிறது.

டாக்டர் சேதுபிள்ளைக்கு பாராட்டுக் கூட்டம்

5—4—57 மாலை 5 மணிக்கு, சென்னைத் தமிழாசிரியர் கழகச் சார்பில், 'டாக்டர்' பட்டம் பெற்ற திரு. இரா. பி. சேதுப்பிள்ளை அவர்களைப் பாராட்டுவதற்கு சென்னை—பார்க் டவுன் மெமோரியல் மண்டபத்தில், திரு. மயிலை-சிவ. முத்து தலைமையில் ஓர் பாராட்டு விழா நடைபெறும். திருவாளர்கள் என். சங்கரன் (நகர மன்ற ஆணையாளர்), அ. மு. பரமசிவானந்தம், பூ. ஆலாலசுந்தரனார், மே. வி. வேணுகோபாலப்பிள்ளை, எஸ். எஸ். அருணகிரிநாதர், திருமதி கிருஷ்ணவேணி அம்மையார் பேசுவர். குடந்தை-டி. பி. சகோதரிகளின் நடன நிகழ்ச்சியும் நடைபெறும்.

மற்றோர் மன்னருக்கு சிக்கலான நிலை!

நாட்டைவிட்டு வெளியேற தயாராகிவிட்டாராம்!

இலண்டன், ஏப். 3—

"தேசியம் என்ற போர்வையில் அரபு நாடுகளில் கம்யூனிஸ்டுகள் புகுந்துகொள்ளும் அபாயம் ஏற்பட்டிருக்கிறது" என்று எடுத்துரைத்துவந்த ஜோர்தான் மன்னர் ஆட்சிக்கு ஆபத்து ஏற்படும் போல் தோன்றுகிறதாம்!

ஜோர்தான் அமைச்சரவை, ரஷ்யாவுடன் தொடர்புகொள்ள வேண்டும் என்று முடிவு செய்திருக்கிறது; ஆனால், நாட்டின் மன்னர் மேல்நாடுகளை ஆதரிப்பவர்.

அமைச்சரவை முறை தவறி நடப்பதாக மன்னர் உசேன், கர்னல் நாசர்—சிரியா தலைவர்-சவூதி அரேபியா மன்னர் ஆகியோருக்கு இரகசியக் கடிதம் எழுதியுள்ளாராம்!

எந்த நேரத்திலும் நாட்டைவிட்டு வெளியேறிவிடுவதற்கு மன்னரின் சொந்த விமானம் தயாராக வைக்கப்பட்டிருப்பதாக செய்திகள் மூலம் தெரியவருகிறது.

நேற்றிரவு நடைபெற்ற மந்திரி சபையின் கூட்டத்தில், ரஷ்யாவுக்கு ஒப்புதலளித்து, இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளுவதென்று முடிவு செய்யப்பட்டதாம்.

ரெயான் துணி இறக்குமதியில் சர்க்கார் கொள்கை என்ன?

உள்நாட்டு உற்பத்திக்கு ஊக்கம் தருவார்களாம்-உதவியளிப்பார்களாம்!

பம்பாய், ஏப். 3—

நாட்டில் ரெயான் துணிகள் இறக்குமதியைத் தடுத்து, உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பதற்கு ஊக்கம் தருவதே இந்திய அரசாங்கத்தின் தற்போதைய கொள்கையாம்!

"இந்தக் கொள்கையை அமுல் செய்வதில் சங்கடங்கள் இருந்தாலும், உள்நாட்டுக் கைத்தொழில் முன்னேற்றத்திற்கு உடனடியாக அரசாங்கம் உதவியளிக்கும்," என்று மத்திய அமைச்சர் ஷா தெரிவித்துள்ளார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.